**தலைப்பு 111 - சுகாதார அமைச்சு மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

சுகாதார அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, கலைத்தல் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 செப்தெம்பர் 29 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, கலைத்தலுக்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிச்செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் அவற்றை நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணிச்செல்லல் பொறுப்பில் இப் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

**மொத்த ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 117,162 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 112,122 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 5,040 மில்லியனாக இருந்ததுடன், அது தேறிய நிதி ஏற்பாட்டில் 4.3 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| மீண்டெழும் | 91,000 | 90,494 | 506 | 0.56 |
| மூலதனம் | 26,162 | 21,628 | 4,534 | 17.33 |
| மொத்தம் | 117,162 | 112,122 | 5,040 | **4.30** |

### 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2014 ஆம் ஆண்டிற்காக 10.03.07.01 ஆம் வருமானக் குறியீட்டிற்காக ரூபா 170 மில்லியனான வருமானம் மதிப்பிடப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 168.7 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 99.25 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| 10.03.07.01 | 170.00 | 168.72 | 1.28 | 0.75 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 11101 | 920.00 | 757.15 | 653.00 | 653.35 | 1,919.00 | 1,398.47 |

## 2.4 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 294.14 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கட்டுநிதி கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 7002/000/00/0100/0014/000 | 211.77 |
| 7003/000/00/014/0014/000 | 82.37 |
| மொத்தம் | 294.14 |

## 2.5 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் மூன்று பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 519 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | **ரூபா மில்லியன்** |
| 6000/0000/00/0015/0024/000 | 473.68 |
| 6000/0000/00/0002/0027/000 | 34.48 |
| 6000/0000/00/0001/0026/000 | 11.48 |
| மொத்தம் | **519.64** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சுகாதார அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட

அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 111 – சுகாதார அமைச்சு

### 3.1 கணக்குகளைச் சமா்ப்பித்தல்

அமைச்சினால் 2015 மாா்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமா்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 10.03.07.01 ஆம் வருமானக் குறியீட்டிற்குரிய வருமானக் கணக்கு 3 ½ மாதங்களுக்கு மேற்பட்ட கால தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கணக்குகள் 2015 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடய இலக்கம் | கணக்கின் பெயர் | தாமதம் |
|---|---|---|
| | | ஆண்டுகள் |
| 34003 | அங்கொடை மனநோய் வைத்தியசாலையின் துறைசார் சிகிச்சை முற்பண பெறும் செயற்பாட்டின் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் முற்பணக் கணக்கு | 08 |
| 34004 | அங்கொட, முல்லேரியா மனநோய் வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களின் பயன்பாட்டிற்காக வெதுப்பக முற்பண செயற்பாட்டின் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் முற்பணக் கணக்கு | 08 |

### 3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் ஏடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | இழப்புக்கள் தொடர்பான | நிதிப்பிரமாணம் 110 |

| | | |
|---|---|---|
| | பதிவேடு | |
| (ஆ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (இ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஈ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (உ) | வாகனப் பட்டியல்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |
| (ஊ) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (எ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டல் |

### 3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------------

கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், செய்யப்பட்ட வேலைப் பட்டியல், பற்றுச்சீட்டுக்கள் பொருள் பெறுவனவு குறிப்புக்கள், பொருள் கையேற்கப்பட்டமைக்கான சான்றுகள் மற்றும் கொடுப்பனவு சான்றிதழ்கள் போன்ற தேவையான சான்றுகள் அமைச்சில் காணப்படாமையால் ரூபா 6,673,828,085 கூட்டுத்தொகைக்குரிய 03 ஒப்பந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் கொள்வனவுக் குழுவிற்கு சமூகமளித்தவர்களின் பெயர் பட்டியல், கூறுவிலை கோரல் கடிதங்கள், கொள்வனவு குழு அறிக்கைகள், பட்டியல்கள் மற்றும் கொடுப்பனவு சான்றிதழ்கள் என்பன காணப்படாமையால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் ரூபா 2,479,727 கூட்டுத்தொகையான 7 கொடுக்கல் வாங்கல்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 3.4 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளித்தல்

----------------------------------------------------------------------------------------------

அமைச்சிற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 37 கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட 05 கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிட கூடியதாக இருந்த கொடுக்கல் வாங்கல்களிற்குரிய பெறுமதி ரூபா 13,121,687,195 ஆகும்

**3.5 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 37 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,584,363,074 தொகையான தேறிய நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 65 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,658,751,362 தொகையான தேறிய நிதியேற்பாட்டிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் 51 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

**3.6 கட்டுநிதிக் கணக்கு**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காணப்பட்ட மொத்த கட்டுநிதி கணக்குகளில் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பொது திறைசேரிக்கு தீர்க்கப்படாதிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 82,009,477 ஆக இருந்தது.

**3.7 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய 2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 118,581,099 ஆக இருந்தது. அம்மீதிகள் தொடர்பில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அரச வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய வைப்புப் பெறுமதிகள் மற்றும் தொடர்ந்தும் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய வைப்புப் பெறுமதிகள் வேறாக இனங்

காணக்கூடிய வகையில் வைப்புப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 7,784,357 தொகையான காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571(i) இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் தயாரிக்கப்பட வேண்டிய பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவல்லை.

(இ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கேகாலை போதனா வைத்தியசாலைக்காக சமைக்காத உணவினை வழங்கிய ஒப்பந்தக்ககாரரின் பெறுமதி சேர் வரிக்கான பதிவு இரத்தாகியிருந்தது, இதனால் அக்காலப்பகுதியில் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,016,888 ஆன பெறுமதி சேர் வரித் தொகை முழுமையாக அறவிடப்பட்டு பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2015 சனவரி 13 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வரித்தொகையை தீர்வு செய்வதற்கோ அல்லது அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.8 வருமானக் கணக்கு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 10.03.07.01 ஆம் வருமானக் குறியீட்டிற்காக மருந்துகள், உபகரணங்கள், கட்டுகள் மற்றும் மருந்துகள் விற்பனை நிலையங்களை பதிவு செய்யும் கட்டண வருமானக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையான வருமானம் ரூபா 4,318,000 ஆக இருந்ததுடன், அது 2011 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படும் மீதியொன்றாகும். நிலுவை மீதிகளை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

## 3.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

11101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 182,058,407 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 69,605,822 ஆன மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் இருந்து வருகின்ற மீதிகளாகும்.

நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், கடன் அறவீடுகளின் பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலைமையில் காணப்பட்டது.

## 3.10 கலைத்தலுக்கான முற்பணக் கணக்குகள்

2004 செப்தம்பர் 22 ஆந் திகதிய 04/1121/008/036 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 34003 மற்றும் 34004 ஆம் இலக்க முற்பண கணக்கு விடயங்களின் கலைப்பு நடவடிக்கைகள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. அக்கலைத்தல் நடவடிக்கைகள் 2006 நவம்பர் 30 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன. எனினும் 2014 திசெம்பர் 31 வரை 08 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அக் கலைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.11 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.11.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 06 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2014 யூன் 09 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

### 3.11.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2014 ஆம் ஆண்டிற்காக உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டம் முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,681,280,000 மதிப்பீட்டுக் கிரயத்திலான 71 உபகரண வகைகளில் 3,059 அலகுகள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2014 செப்தம்பர் மாதம் வரையிலும் அதில் எவ்வித உபகரணமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 123,009,838 கிரயத்திலான 09 உபகரண வகைகளில் 436 அலகுகள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) கொள்வனவுத் திட்டத்தை நாளதுவரையாக்காமல் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 655,478,906 தொகையான நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 36 உபகரண வகைகள் அந் நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்தி மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.11.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் குழுக்கள்

2009 யூன் 12 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/1 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறையேனும் கூட்டங்கள் நடாத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை மூன்று கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.12 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கீழே விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்கள் வகை | சொத்துக்கள் உரித்துடைய நிறுவனம் | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்த காலம் |
|---|---|---|---|
| கட்டிடங்கள் (மாளிகாவத்த சிறுநீரக | தேசிய வைத்தியசாலை | 01 | ஓராண்டிற்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| பிரிவின் சமையலறை) | | | |
| மோட்டார் வாகனங்கள் | சுகாதார அமைச்சு | 09 | ஓராண்டிற்கு மேல் |
| இயந்திரங்கள் | யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை | 01 | 05 ஆண்டுகளுக்கு மேல் |
| உபரணங்கள் மற்றும் தளபாடங்கள் | யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை | 1,700 | 01 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் வரை |
| மருத்துவ உபகரணங்கள் | காசல் வீதி மகளிர் வைத்தியசாலை | 24 | ஓராண்டிற்கு மேல் |
| கணனி மென்பொருட்கள் | குடும்ப சுகாதார அலகு, சிறுநீரக பிரிவு மற்றும் நுவரெலியா, கல்முனை, யாழ்ப்பாணம், கந்தளாய், அக்கறைப்பற்று பேராதனை ஆகிய வைத்தியசாலைகள் | 08 | 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரை |

(ii) குருணாகல் போதனா வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலும் 03 சத்திர சிகிச்சை பொருள் வகைகளில் 56,000 அலகுகள் புற்றுநோய் பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், மருந்துகள் அடங்கிய பெட்டிகள் ஆங்காங்கே பாதுகாப்பற்ற விதத்தில் வைக்கப்பட்டிருந்தன. மருந்துகளின் மாதிரிகளின் பிரகாரம் அநேகமான மருந்துகள் நிர்ணயிக்கப்பட்ட வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு அவற்றின் தரம் பாதுகாக்கப்பட வேண்டுமென முன்னைய கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்

காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 562,000 நிதிஏற்பாடுகளிலிருந்து கேகாலை மாவட்ட வைத்தியசாலையின் தர முகாமைத்துவ அலகிற்காக கொள்வனவு செய்ய்பபட்டிருந்த ரூபா 307,000 பெறுமதியான தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(iv) சத்திர சிகிச்சை கூடங்களின் பயன்பாட்டிற்காக மீளாய்வாண்டின் முதலாவது காலண்டின் போது அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 4,475,235 பெறுமதியான உபகரணங்களும் வைத்தியசாலையின் வேண்டுகோள் ஒன்றில்லாமல் 2014 யூலை 16 ஆந் திகதி உபபாகங்கள் இல்லாமல் வழங்கப்பட்டிருந்த ரூபா 390,000 கிரயமான 02 Oxygen Concentrator உம் வாட்களில் போதியளவு CTG Machine காணப்பட்ட போதிலும், 2014 மே 21 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 197,000 பெறுமதியான CTG Machine ஒன்றும் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் ஓராண்டிற்கு அண்மித்த காலமாக பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்தன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் 65 நிறுவனங்களில் 36 நிறுவனங்கள் அந்நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 03 நிறுவனங்கள் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்காக பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த வாகனங்கள் பௌதீக மெய்மையாய்வின் போது வரிசை அமைச்சின் கீழ் இருந்த

வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் காணப்படும் வாகனங்கள் மாத்திரம் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், அமைச்சில் பயன்படுத்தப்படும் வாகனங்களோ அல்லது வெளிநிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---

அமைச்சினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காட்டப்படுள்ளன.

(i) முறைப்படி கைதவிர்க்கப்படாத 11 வாகனங்கள் தொழில் பயிற்சி நிறுவனத்திற்கு பழுதடைந்த வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்ததாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அமைச்சின் பெயரிலான பதிவு இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், உரிய நிறுவனங்களுக்கு கிடைத்ததாக அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) 04 பிணியாளர் வண்டிகள் உட்பட 08 வாகனங்களின் பயன்பாட்டு உரித்து 08 வெளிநிறுவனங்களுக்கு முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டிருந்தது. பயன்படுத்தும் உரிமையை கையளிப்பதற்கு முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் மேலும் 09 பிணியாளர் வண்டிகள் 04 வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறு வழங்கப்பட்டிருந்த 17 வாகனங்கள் உள்ளவாறாக அந்நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெற்றதாகவோ அல்லது பொறுப்பேற்றமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஈ) ஏனைய நிறுவனங்களிடமிருந்த சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

---

பதிவு உரித்து வெளிப்படுத்தப்படாத மற்றும் அமைச்சிற்கு சொந்தமில்லாத 49 வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

**(உ) சொத்துக்கள் கைத்தவிர்க்கப்படாமை மற்றும் முறையற்ற விதத்தில் கைத்தவிர்ப்பு செய்யப்படல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பயன்படுத்தப்படாமல் அமைச்சிற்கு வெளியே வெவ்வேறு இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 09 வாகனங்களை முறைப்படி கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வடக்கு கிழக்கு யுத்தத்தின் போது காணாமல் போனதாக பொலிசிற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த 11 வாகனங்களின் சட்டரீதியான உரித்தினை அமைச்சின் வசமிருப்பது வெளிப்படுத்தப்பட்டது. இவ்வானங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கும் ஏதேனும் முறைகேடுகள் அல்லது மோசடிகளோ மேற்கொள்ள முடியாத வகையில் அவற்றின் பதிவினை இரத்துச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தீர்வை வரி இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்டிருந்தமையால் விற்பனை செய்வதற்கோ அல்லது கையளிப்பு மேற்கொள்ள முடியாதென்ற நிபந்தனைகளுடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 48 வாகனங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. 48 வாகனங்களின் சட்டரீதியான உரித்தைக் கைதவிர்ப்பதற்கும் முறையான அங்கீகாரத்துடன் புத்தகத்திலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 48 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அவை காணாமல் போன வாகனங்களாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தன.

**(ஊ) காணாமல் போன சொத்துக்கள்**

---

அமைச்சிடம் சட்டரீதியான உரித்துக் காணப்பட்ட 752 வாகனங்கள் அமைச்சின் வாகன குழாமில் பௌதீக ரீதியாக காணப்படாமை கண்டறியப்பட்டது. அவ்வாகனங்கள் கைதவிர்க்கப்பட்டதா அல்லது அவ்வாறில்லையெனின் தற்போது

காணப்படும் இடங்களோ அல்லது எத்தரப்பினரால் தற்போது பயன்படுத்தப்படுகின்றன என்பது தொடர்பாக நிச்சயமான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 3.13 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்களின் ரூபா 6,789,967,480 ஆக இருப்பது கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கும் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் தீர்வுசெய்யப்படாத ரூபா 14,961,757,448 ஆன பொறுப்புக்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.14 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(i) சட்டரீதியான ஏற்பாடுகள்** | | |
| • 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச் சட்டம் | - | மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படாத 15 இற்கு மேற்பட்ட வாகனங்கள் அமைச்சினால் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| • 1980 இன் 27 ஆம் இலக்க காயக்கட்டு, | 23,470,500 | வழங்குனர்களால் இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரச்சட்டம் | | வைத்திய உபகரணங்கள், காயக்கட்டு, உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபையில் பதிவுசெய்து இறக்குமதி அனுமதிப்பத்திர மொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் Resuscilator Baby உபகரணத்திற்காக இறக்குமதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாத வழங்குனரிடமிருந்து அத்தகைய 15 உபகரணங்கள் உயிர் மருத்துவ பொறியியலாளர் சேவைப் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் மருத்துவ உபகரணங்கள் பதிவுச் சான்றிதழ் மற்றும் இறக்குமதி அனுமதிப்பத்திரம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளாத வழங்குனரிடமிருந்து C-Arm – X ray இயந்திரமொன்றையும் Pediatric Fiber Optic Nasolaringoscope என்ற பெயரிலான இரண்டு இயந்திரங்கள் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| • | 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்தின் 02(1) உப பிரிவு | 69,114,993 | ஒப்பந்த உடன்படிக்கை கம்பனிகள் கம்பனிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் பதிவு செய்ய சான்றிதழொன்றை ஒப்பந்தக் காரரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவினால் |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டிருந்த 05 ஒப்பந்தங்களுக்கும் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையால் வழங்கப்பட்டிருந்த 01 ஒப்பந்தத்திற்குரிய உடன்படிக்கை பதிவுசெய்யும் சான்றிதழை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கவில்லை. |
| (ii) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை**<br>-----------------------------------------------------<br>XII ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பிரிவு மற்றும் II ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 1.4 ஆம் பிரிவு மற்றும் I ஆம் தொகுதி | 96,244 | கொழும்புத் துறைமுகத்தில் அமைக்கப்பட்டிருந்த சுகாதார அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த மூன்று வைத்தியர்கள் அங்கீகாரமின்றி வெளிநாடு சென்றிருக்கையில் இந்நாட்டில் சேவை புரிந்ததாக போலியாக தினக்குறிப்பேட்டை பேணி அவ்வாறான 09 சந்தர்ப்பங்களின் போது 63 நாட்களுக்காக சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தனர். |
| (iii) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவை**<br>-----------------------------------------------------<br>• நிதிப்பிரமாணம் 106(3) | 3,285,475 | அறவிட முடியாத நட்டங்கள் மற்றும் சேதங்கள் என்பவற்றை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்காக கட்டளை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், திறைசேரியிடமிருந்து நிதிஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டு அந்நட்டங்களைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| • நிதிப் பிரமாணம் 109 | 206,932,423 | மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப் பட்டிருந்த 2002 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய நட்டங்கள் மற்றும் சேதங்களையோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| • நிதிப் பிரமாணம் 156(1) | 824,450 | உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையிலிருந்து காணாமல் போன கண் வில்லை மற்றும் கந்தானை மாவட்ட வைத்தியசாலையில் இருந்து திருத்த வேலைக்காக கையளிக்கப்பட்டு மீளப்பெற்றுக் கொள்ளப்படாத மருந்துகள் எண்ணும் இயந்திரத்தின் பெறுமதிக் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு முறையாக நடவடிக்கை எடுக்காமல் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

(iv) **2007 ஏப்ரல் 5 ஆந் திகதிய 33 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை**

---

| | | |
|---|---|---|
| • 2.1.2 ஆம் பந்தி | - | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகார மொன்று இல்லாமல் எய்ட்ஸ், |

| | | |
|---|---|---|
| | | காசநோய் மற்றும் மலேரியா ஒழிப்பு என்பவற்றிற்கான உலகலாவிய நிதியச் செயற்திட்டத்திற்கு 349 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். |
| • 4.3.2 ஆம் பந்தி | 967,797 | எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா என்பவற்றினை ஒழிப்பதற்கான உலகலாவிய நிதியச் செயற்திட்ட பதவியணியினருக்கு விடுவிப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப் பட்டிருந்த விதவை மற்றும் அநாதை ஓய்வூதியச் சம்பள முறைமைக்கு பங்களிப்புச் செய்யும் அரச சேவையிலுள்ள 16 உத்தியோகத்தர்களுக்கு செயற் திட்டத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (v) **சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை** | | |
| ------------------------------------------------------- | | |
| 2014 பெப்ரவரி 12 ஆந் திகதிய எஸ்ஏ/01/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 23 ஆம் பந்தி | 932,217 | சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் 01 ஆம் இலக்க வாட் மற்றும் தாதிகளுக்கான தங்குமிடவிடுதி ஆகியவற்றை பழுதுபார்ப்பதற்கான கொள்வனவு ரூபா 200,000 எல்லைக்கு உட்படக்கூடிய வகையில் இரண்டு கொள்வனவுகள் 09 பகுதிகளாக வேறாக்கப்பட்டு மூன்று ஒப்பந்தக்காரர்களுக்கு அந்த கொள்வனவுகள் கையளிக்கப்பட்டிருந்தன |

## (ஆ) கொள்வனவு வழிகாட்டல் கோவைக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பதுளை பொது வைத்தியசாலைக்கு 150 மெத்தைகள் கொள்வனவு செய்வதற்காக சந்தை விலை ஒப்பிட்டு முறைமை பின்பற்றப்பட்டு 2014 சனவரி 29 ஆந் திகதி ஒன்று ரூபா 2,500 வீதம் 200 மெத்தைகள் ரூபா 500,000 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2014 மே 30 ஆந் திகதி அவ்வழங்குனரிடமிருந்து மேலும் 100 மெத்தைகள் ரூபா 250,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 150 மெத்தைகளுக்காக சந்தை விலை ஒப்பிட்டு முறைமை பின்பற்றப்பட்டிருந்ததால் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.6 வழிகாட்டலின் பிரகாரம் அதில் 50 சதவீதமான 75 மெத்தைகளுக்கு மாத்திரம் மீண்டும் கட்டளையிடக் கூடியதாக இருந்த போதிலும், அதற்கு முரணாக அதற்காக மொத்தம் ரூபா 187,500 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) பதுளை பொது வைத்தியசாலையின் சிறிய திருத்த வேலைகளுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து கூறுவிலை கோரப்படாமல் தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு ரூபா 1,627,558 கிரயத்திலான திருத்த வேலை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) காயக்கட்டு உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபையில் மருந்துகளை பதிவு செய்யாதிருந்த வழங்குனர் ஒருவரிடமிருந்து 2014 சனவரி மாதத்தின் போது ஒன்று 713.80 வீதம் ரூபா 23,848,058 மொத்தக் கிரயத்திலான தேவையான மாதிரிகளுக்கு இணங்காத வகையில் 33,410 Bupivacaine hydrochloride injection 0.5 சதவீதம் மருந்து அலகுகள் மருத்துவ வழங்கல் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவசர தேவைப்பாடாக குறிப்பிடப்பட்டு கட்டளை வழங்கப்பட்டு 48 மணித்தியாலங்களில் வழங்க வேண்டுமென்ற நிபந்தனையொன்று குறிப்பிடப்பட்டு உள்நாட்டில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், 14 நாட்கள் முதல் 43 நாட்கள் வரையான வீச்சிலான கால தாமதத்தின் பின்னர் 04 சந்தர்ப்பங்களில் வழங்கல் கையேற்கப்பட்டிருந்தன. அவ்வாறே 2014 பெப்ரவரி மாதத்தின் போது தேவையான மாதிரிகளுடன் கூடிய இந்த மருந்து அலகொன்று ரூபா 402.91 இற்கு அரச மருந்தாக்கல்

கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்தமையால் உள்நாட்டு வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதன் மூலம் அரசிற்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 10,386,835 ஆக இருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையால் ரூபா 8,865,000 தொகை செலவு செய்து C-Arm – X-Ray இயந்திமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களின் பிரகாரம் இயந்திரத்தின் கிரயம் மற்றும் 10 ஆண்டு பராமரிப்புக் கிரயத்தின் தேறிய தற்போதைய பெறுமதி சேர்க்கப்பட்டு விலை விபரங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் இயந்திரத்தின் கிரயம் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டு வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். முறையாக விலை விபரங்கள் மதிப்பீடு செய்யப்படாத காரணத்தினால் அதிக விலை முன்வைத்திருந்த வழங்குனரிடமிருந்து இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமையால் அரசிற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 2,216,290 ஆக இருந்தது. வழங்குனருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(v) 2014 மே மாதத்திலிருந்து 2015 ஏப்ரல் வரையான ஓராண்டு காலத்திற்கு மாத்தறை பொது வைத்தியசாலைக்கு சமைக்காத உணவு வழங்புவதற்கான ஒப்பந்தம் ரூபா 31,893,600 இற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வழங்குனருடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திட்பட்டிருக்க வில்லை. 2015 மே மாதம் முதல் கொள்வனவு செயற்பாடுகள் பின்பற்றப்பட்டு புதிய ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மாத்தறை பொது வைத்தியசாலைக்கு சமைக்காத உணவு வழங்கும் பழைய ஒப்பந்தக்காரர் மூலமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.15 வெளிநாட்டு கடன் மற்றும் வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

---

மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் செயற்படுத்துவதற்கு உத்திதேசிக்கப்பட்ட 63 செயற்திட்டங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 20,953.14 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 9,813.67 பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) கணக்காய்விற்கு உட்படாத வெளிநாட்டு கடன் உதவி செயற்திட்டங்கள்

ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்தல், வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்காக விஷேட கவனம் செலுத்தி இலங்கையின் தேசிய இரத்த வடிகட்டல் சேவைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேசிய இரத்த வடிகட்டல் சேவையின் கீழ் காணப்படும் பிரிவு இரத்த வங்கி நிர்மாணம் மற்றும் மேம்படுத்தல் போன்ற 03 செயற்திட்டங்களுக்காக நெதர்லாந்து அரசினால் வெளிநாட்டுக் கடன் உதவி வழங்கப்பட்டிருந்தது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன் நிதிகளில் ரூபா 6,349.44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அச்செலவினங்கள் செய்யப்பட்ட கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விக்குச் சமர்ப்பிக்கப்படாததால் அந்த மூன்று செயற்திட்டங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### (ஆ) அமைச்சினால் நிர்மாணச் செயற்திட்டங்களுக்கு நிதிகள் பயன்படுத்தப்பட்டமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது வேலைகள் ஆரம்பிப்பதற்கு தவறியமையால் 03 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 85.00 மில்லியன் நிதி ஏற்பாடு மற்றும் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பம் வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த 02 நிர்மாண செயற்திட்டங்களுக்காக வெளிநாட்டு உதவிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 23.00 மில்லியன் நிதி ஏற்பாடு ஆகியன முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) தேவைப்பாட்டை இனங்காணாமை, கொள்வனவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை, வேலைகளை இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமை, ஒப்பந்தக்காரர் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல், மற்றும் போதியளவு கட்டுநிதி கிடைக்காமை போன்ற விடயங்கள் காரணமாக மீளாய்வாண்டின் போது 10 வெளிநாட்டு நிதிய நிர்மாண செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 372.20 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் ரூபா 55.72 மில்லியன் மாத்திரம்

பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதி செயல் முன்னேற்றம் 15 சதவீதம் மாத்திரம் ஆகும்.

(iii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1.41 மில்லியன் செலவிடப்பட்டிருந்த 5 செயற்திட்டங்களுக்கு, மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 460.00 மில்லியன் நிதி ஏற்பாடுகளிலிருந்து எவ்விதப் பயன்பாடுகளும் இடம் பெற்றிருக்கவில்லை.

**(இ) வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட சில கைத்தொழில்களை கைவிடல்**

---

காலி, மஹமோதர மகப்பேற்று வைத்தியசாலை நிர்மாணச் செயற்திட்டம் 2005 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு அத்திவாரம் மாத்திரம் இடப்பட்டதன் பின்னர் நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்நிர்மாணங்களுக்குரிய நிதி ஏற்பாடு கிடைத்த முறை, கிடைத்த நிதி ஏற்பாடு அளவு, மொத்த கிரய மதிப்பீடு, பொறியியலாளர் மதிப்பீடு, ஒப்பந்தக்காரரைத் தெரிவுசெய்தல் என்பவற்றிற்காக பின்பற்றப்பட்ட கொள்வனவு முறைமை, ஒப்பந்தப் பெறுமதி, உடன்படிக்கை, திட்டம் மற்றும் சித்திரக் குறிப்புக்கள் ஒப்பந்தக்காரருக்கு பணக் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்வுக்கு சமர்பிக்கப்படவில்லை.

இந் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு 06 ஆண்டுகளின் பின்னர் அதாவது 2011 ஏப்ரல் 05 ஆம் திகதி 11/0812/504/073 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஜேர்மனியின் புனர்நிர்மான வங்கியிடமிருந்து ரூபா 28 யூரோ மில்லியன் அல்லது ரூபா 4,300 மில்லியன் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள அத்திவாரத்தின் மேல் 600 கட்டில்கள் மற்றும் 800 நோயாளர்களுக்கு வசதிகளை வழங்கக்கூடிய வகையில் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவுடன் எஞ்சிய நிர்மாணத்தை மேற்கொள்வதற்காக 2012 ஆகஸ்ட் 16 ஆம் திகதி குறித்த கடன் ஒப்பந்தத்தில் கைசாத்திடப்பட்டிருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை 2015 யூலை 30 ஆம் திகதி கைசாத்திடப்பட்டிருந்தது.

.

## 3.16 உள்நாட்டு நிதிய செயற்திட்டம்

உள்நாட்டு நிதி செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) செயற்திட்டம் பூர்த்தி செய்யபப்படாது கைவிடப்படுதல்

பின்வரும் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

(i) மீளாய்வாண்டின் போது வேலையை ஆரம்பிப்பதற்கு தவறியமையால் உள்நாட்டு நிதியத்திலிருந்து செயற்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 15.00 மில்லியன் நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் 7 மாடிகளுடன் கூடிய வாட்டு தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட மொத்த கிரய மதிப்பீடு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. 2006 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் உள்நாட்டு நிதியங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த நிதி ஏற்பாடு ரூபா 1,065.03 மில்லியனாக இருந்தது. அமைச்சின் கொள்வனவுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்தக்காரருக்கு ரூபா 398.14 மில்லியனான ஒப்பந்த பெறுமதியுடன் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் அந்நிர்மாண நடவடிக்கைகள் 2006 செப்தெம்பர் 15 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2008 மார்ச் 9 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 07 மாடிகளுடன் கூடிய கட்டிடத்தினை 08 மாடிகள் வரை அதிகரிப்பதற்கு முன் வந்திருந்த நன்கொடையாளர் ஒருவருடன் 2008 ஒக்தோபர் 9 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஒப்பந்த பெறுமதி ரூபா 100 மில்லியனை மிகைத்திருந்தமையால் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.14 வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டிருந்த செயற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரவை கொள்வனவு குழுவினால் ஒப்பந்தக்காரர் தெரிவு

செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அமைச்சின் கொள்வனவுக் குழுவினால் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

- அங்கீகரிக்கப்பட வேண்டிய 7 மாடிகளுடன் கூடிய கட்டிடத்தை 8 மாடிகள் வரை அதிகரிப்பதற்கு தேவையான மேலதிகப் பணத்திற்காக 700,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன் வந்திருந்த நன்கொடையாளருடன் 2008 ஒக்தோபர் 9 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது, எனினும் அதன் போது 7 மாடிகளுடனான கட்டிடத்திற்காக அத்திவாரம் நிறைவு செய்யப்பட்டிருந்தமையால் 8 மாடிகள் வரை அதிகரிக்க முடியுமா என மதியுரை நிறுவனமொன்றிடமோ அல்லது தகைமையுடைய பொறியியலாளரிடமோ சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மேலதிக மாடியை நிர்மாணிப்பதற்காக கட்டிடத்தின் அமைப்பை மாற்றி நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முன் திருத்திய பொறியியலாளர் மதிப்பீடு ஒன்றைத் தயாரிப்பதற்கோ அல்லது கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கோ ஒப்பந்தக்காரருடன் திருத்திய உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வேலையை பகிஷ்கரித்தல் மற்றும் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியதன் காரணமாக 2014 பெப்ரவரி 21 ஆம் திகதி ஒப்பந்தக்காரரின் வேலை இடை நிறுத்தப்பட்டிருந்தது. அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக உபகரண கொள்வனவு முற்பணமாக ரூபா 42.97 மில்லியன் உட்பட ரூபா 122.59 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த முற்பணங்களில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 50.93 மில்லியனான முற்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் அந்த முற்பணத்தை முற்பண பிணை முறி மூலம் அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்க எடுக்கவில்லை.

- உபகரணங்கள் கொள்வனவிற்காக முற்பணத்தை பயன்படுத்தி ஒப்பந்தக்காரர்களால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 42.97

மில்லியன் கிரயமான இரண்டு உபகரணங்கள் இரண்டு வருடங்களாக விளைவற்று வேலைத் தளத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் உத்தரவாத காலம் தொடர்பாக தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

- 2010 மார்ச் 16 ஆம் திகதி முதல் 2012 செப்தெம்பர் 31 ஆம் திகதி வரையான 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒப்பந்தக்காரரால் நிர்மாணங்கள் முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை கோவையின் குறிப்புக்கள் மற்றும் தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டன. எனினும் அக்காலத்திற்காக மதியுரை நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான மத்திய பொறியியல் உசாத்துணை தொடர்பான பணியகத்திற்கு மதியுரைக் கட்டணமாக ரூபா 14.16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வேலை முடிவடைந்திராத அத்திகதி வரை நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே ரூபா 241.35 மில்லியன் அதாவது 65 சதவீதமாக மாத்திரம் இருந்தது.

- 2009 மே 31 ஆந் திகதி வரை ரூபா 19,906,977 தொகையான செயலாற்றல் பிணைப்பொறுப்பு காலாவதியாகியிருந்தது. எனினும் அதன் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் செயலாற்றல் பிணைப்பொறுப்பினை அறவிட முடியாதிருந்தது.

## 3.17 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தலின் குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

அமைச்சினால் 2014 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த சீராக்கல்கள் மீதான பகுப்பாய்வின் படி வெளிப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | காலப்பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|
| **தொடர் இலக்கம்** | **சீராக்கல் தொடர்பான விபரம்** | **06 மாத்திற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த** | **01 ஆண்டிற்கு மேல் 03 இற்கு குறைந்த** | **மொத்தம்** |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 6,610,129 | 260,527 | 6,870,656 |
| (ii) | இனங்காணப்படாத செலவு | 218,435 | - | 218,435 |

## 3.18 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாகக் காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் போது மாத்தறை பொது வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 15.94 மில்லியன் மொத்தக் கிரயமுடைய 13 வகையான உபகரண வகைகளில் ரூபா 8.86 மில்லியனான மொத்தக் கிரயமான 06 உபகரண வகைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வைத்தியசாலைக்கு கிடைத்திருக்கவில்லை. அவ்வாறு வழங்கப்படாத உபகரணங்கள் மாதிரிக்கு இணங்கியதா என பரீட்சிக்கப்படாமல் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்வதற்காக எழுதப்பட்டிருந்த 06 காசோலைகள் விடய எழுதுனரிடம் காணப்பட்டன.

(ஆ) ரூபா 3.35 மில்லியன் பட்டியல் பெறுமதியான 395 Deltacide கிருமி நாசினிகள் கொள்வனவின் போது உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவின் பிராந்திய பெறுகைக் குழுவிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 3.00 மில்லியன் அதிகார எல்லைக்குள் கொள்வனவு செய்யுமாறும் பட்டியல் பெறுமதி இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு ரூபா 2.98 மில்லியன் மற்றும் ரூபா 0.36 மில்லியன் என இரண்டு காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஏல விற்பனைக்கு சமர்ப்பிக்கப்படாமல், ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படாத வாகனமொன்றாக போலியான தகவல்களைச் சமர்ப்பித்து பெறுமதி வெளிப்படுத்தப்படாத போதிலும், மிட்சுபிஷி வாகனமொன்று ரூபா 290,000 ஆன குறைந்த பெறுமதியில் உத்தியோகத்தரொருவருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கைதவிர்ப்பதற்காக முறையான பரிந்துரையொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் பெறுமதி முறையாக மதிப்பீடு செய்யப்படாத மற்றும் பிரசித்த ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படாதிருந்த மிட்சுபிஷி ஜீப் வண்டியொன்று ரூபா 395,000 போன்ற குறைந்த பெறுமதிக்கு உத்தியோகத்தரொருவருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

### 3.19 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

-----------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) காயக்கட்டு, உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாமலும் மற்றும் இறக்குமதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளாமலும் தனியார் நிறுவனமொன்றினால் இறக்குமதி செய்யப்பட்டிருந்த மருந்துகளை விடுவிப்பதற்காக இறக்குமதி தொடர்பான எதிர்ப்பொன்று இல்லையென குறிப்பிட்டு மீளாய்வாண்டில் உரிய அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த கடிதங்களின் எண்ணிக்கை 1,121 ஆக இருந்தன. இந்த 1,121 சந்தர்ப்பங்களுக்குரிய மருந்துகள் பதிவுசெய்தல் வருமானம் அதிகாரசபைக்கு இழக்கப்பட்டிருந்தன.

(ஆ) கேகாலை போதனா வைத்தியசாலைக்கு சமைக்காத உணவுகளை வழங்கும் ஒப்பந்தத்தின் உடன்படிக்கை காலம் மற்றும் செயலாற்றல் பிணைப்பொறுப்பு காலம் என்பன காலாவதியாக இருக்கையில் ரூபா 2,246,714 தொகை செலவிடப்பட்டு 2014 மார்ச் 01 ஆந் திகதி முதல் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை இரண்டு மாத காலப்பகுதிக்கு தேவையான சமைக்காத உணவு பழைய ஒப்பந்தக்காரரிடமிருந்தே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3.20 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மருத்துவ வழங்கல் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை பொருட்களுக்காக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கும் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 14,961.76 மில்லியனாக இருந்தமை கணக்குகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அது ரூபா 3,110.99 மில்லியன் என உரிய இரண்டு கூட்டுத்தாபனங்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மீதி உறுதிப்படுத்தல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு ரூபா 11,850.77 மில்லியன் வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.21 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் வழிகாட்டல்களுக்கு முரணாக நலன்புரிச் சங்கங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை குழுவினால் தெரிவுசெய்யப்பட்டிருந்த 11 வழங்குனர்களுக்கு தேசிய வைத்தியசாலை வளவில் அமைந்துள்ள 11 சிற்றுண்டிச்சாலைகளை நடாத்திச் செல்வதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 3.22 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்பட்ட நட்டங்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) காயக்கட்டு, உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரசபையினால் 2014 ஆம் ஆண்டிற்குரிய வியாபார நிலையங்கள் பதிவுசெய்வதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமலும் பெற்ற அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காமலும் நடாத்திச் செல்லப்பட்ட மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வியாபார நிலையங்களிலிருந்து மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 159 வியாபார நிலையங்களிலிருந்து அரசிற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 1,943,500 ஆக இருந்தது. உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர்களால் இந்த வியாபார நிலையங்கள் பரீட்சிக்கப்பட்டு வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது.

(ஆ) மருத்துவ வழங்கல் பிரிவினால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் வெளிநாட்டு வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை பொருட்களை வைத்தியசாலைகளுக்கு விநியோகித்தன் பின்னர் தரப்பரிசோதனைக்கு உட்படுத்தும் முறையற்ற முறைமை காரணமாக மருந்துகள் மற்றும் சிகிச்சை பொருட்களை நோயாளிகளுக்கு வழங்கியதன் பின்னர் தரப் பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றிருந்தது. அந்ததரப் பரிசோதனை அறிக்கைகளிலிருந்து தரத்தில் குறைந்ததாக உறுதிப்படுத்தப்பட்ட ரூபா 218.62 மில்லியன் பெறுமதியான மருந்துகளையும் சத்திர சிகிச்சை பொருட்களையும் பாவனையிலிருந்து அகற்றுமாறு கட்டளையிடப்பட்டு மீளாய்வாண்டினுள் மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்டிருந்த 45 சுற்றறிக்கைகள் வைத்தியசாலைகளுக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் வரையில் மருந்துகள் மற்றும் சிகிச்சை பொருட்களில் பெருமளவானவை நோயாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஒழிப்பு செயற்திட்டத்திற்குரித்தாக செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பேரில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த மிகைக் கட்டணத்தின் பெறுமதி ரூபா 3.54 மில்லியனாக இருந்தது.

(ஈ) அரச வைத்தியாசலைகளுக்கு தேவையான மருந்துகள், சிகிச்சை பொருட்கள் மற்றும் இரசாயன உபகரணங்கள் என்பன உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு போட்டி வழங்குனர்களிடமிருந்து குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்காக முறையாக தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் நீண்டகாலமாக அவ்வப்போது உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நேர்ந்திருந்தன. 2007 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவினால் அவ்வாறு உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருந்துகள், சிகிச்சை பொருட்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் என்பவற்றிற்காக செலவிடப்பட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 4,089.92 மில்லியனாக இருந்தது.

## 3.23 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) குருணாகல் பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை, அது அமைந்துள்ள காணியின் அளவு மற்றும் தொடர்பாடல் இல்லம் என்பவற்றை அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையிலிருந்து விலகி தெரிவுசெய்யப்பட்டிருந்த பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றுக்கு மாதமொன்றிற்கு ரூபா 15,900 வீதம் ஆண்டிற்கு ரூபா 190,800 தொகையான மதிப்பீட்டுத் தொகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த கூட்டுறவு சங்கத்தினால் அச்சொத்துக்களை வேறு தரப்பினருக்கு மாதமொன்றிற்கு ரூபா 523,000 வீதம் ஆண்டொன்றிற்கு ரூபா 6,276,000 ஆன வருமானமொன்று கிடைக்கக் கூடிய வகையில் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வருடாந்தம் வைத்தியசாலையால் இழக்கப்பட்ட வருமானம் அண்ணளவாக ரூபா 6,085,200 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) விலை விபரங்கள் ஒப்பிடப்பட்டு கருத்திற் கொள்ளப்படாமை மற்றும் சிக்கனமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக பதுளை பொது வைத்தியசாலைக்கு சமைக்காத உணவுகளை பெற்றுக்கொள்ளும் போது 15 விடயங்களுக்காக ஆண்டொன்றிற்கு ரூபா 5,600,052 தொகை கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது.

(இ) பதுளை பொது வைத்தியசாலையின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக வழங்குனருடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவையில் ஈடுபடும் ஊழியரொருவர் ஒரு நாளைக்கு 12 மணித்தியால காலப்பகுதி சேவை புரிந்ததன் பின்னர் மேலதிக வேலை நேரத்திற்காக உரித்துள்ள போதிலும், நாளாந்தம் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்யாத 147 ஊழியர்களுக்காக நாளொன்றுக்கு கூடுதலாக ரூபா 8,747 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்ததன் காரணமாக வருடாந்தம் ரூபா 3,192,757 தொகை சிக்கனமற்ற செலவினமொன்று வைத்தியசாலையால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.24 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

---

அமைச்சிற்குரித்தான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அமைச்சினால் சீர்செய்யப்பட்டிராத பந்திகளுடனான தொடர்பு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இல. | |
| 2007 | 6.6(a)xiii | மருந்துகளைப் போக்குவரத்துச் செய்யம் போது ஏற்பட்டிருந்த ரூபா 10,499,595 ஆன பற்றாக்குறையை வழங்குனரிடமிருந்து அறவிடல். |

### 3.25 முகாமைத்தவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் மூலதனச் செலவினம் தொடர்பான வெளிநாட்டு மானியப் பயன்பாடு 35 சதவீதமும் வெளிநாட்டு கடன் பயன்பாடு 91 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தன. அதன் பிரகாரம் வெளிநாட்டு கடன் பயன்பாட்டிற்கு ஒப்பாக வெளிநாட்டு மானியங்களின் பயன்பாடு பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) பரீட்சைகளை நடாத்துவதற்கும், விடைப்பத்திரங்களைப் பரீட்சிப்பதற்கும் பரீட்சைகளை நடாத்துவதற்கான ஏனைய செலவினங்களுக்காகவும் ரூபா 1,792,488 தொகை செலவு செய்து 2013 மே 05 ஆம் திகதியும் 2013 யூலை 21 ஆம் திகதியும் அமைச்சினால் நடாத்தப்பட்டிருந்த தொடர்பாடல் செயற்பாட்டாளர் மற்றும் மேற்பார்வையாளர் / கண்காணிப்பாளர் பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பு பரீட்சையின் பெறுபேறுகள் பலவீனமான முகாமைத்துவம் காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(இ) கல்வி நடவடிக்கைகள் மற்றும் தொழில்களுக்காக வெளிநாடு சென்றிருந்த 78 வைத்தியர்கள் உரிய திகதியில் சேவைக்கு அறிக்கை இடாமல் இருந்ததுடன், அதில் 49 வைத்தியர்களிடமிருந்து உடன்படிக்கையின் பிரகாரம் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 37,330,660 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சம்பளம் இல்லாமல் வெளிநாடு

சென்றிருந்த இரண்டு வைத்தியர்களுக்கு சம்பளமாக ரூபா 1,099,583 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) விஷேட நிபுணத்துவ மருத்துவப் பயிற்சிகளுக்காக வருடாந்தம் அதிக பணம் செலவாகியிருந்ததுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் அதற்காக ரூபா 4,587,102,523 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் விசேட நிபுணத்துவ பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட வைத்தியர்கள் நாட்டிற்கு வருகை தராத போக்கொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விசேட நிபுணத்துவ பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட 56 வைத்தியர்கள் நாட்டிற்கு வருகை தந்திருக்கவில்லை.

(உ) தேசிய வைத்தியசாலை சிறுநீரக பிரிவின் இரத்த சுத்திகரிப்பு உபரணங்களுக்காக தேவையான உப பாகங்களான Dialyzer வழங்கப்படாதிருந்ததன் காரணமாக 2014 நவம்பர் மாதத்தில் மாத்திரம் 104 சந்தர்ப்பங்களில் நோயாளர்களின் சொந்தப் பணத்தில் இந்த உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் பாவனையின் பின்னர் அந்த உப பாகங்களை சுத்திகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தமான Renal in Solution வழங்கப்படாத காரணத்தினால் அந்த உப பாகங்களை மீண்டும் பயன்படுத்தும் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

(ஊ) தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 6 வைத்தியசாலைகளிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 3 வைத்தியசாலைகளில் நடாத்திச் செல்லப்படும் சிற்றுண்டிச்சாலைகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 17,111,999 தொகையான வாடகை வருமானத்தையும் ரூபா 508,186 தொகையான நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் என்பவற்றையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பதுளை பொது வைத்தியசாலையின் 2 சிற்றுண்டிச்சாலைகளின் ஒப்பந்த உடன்படிக்கை காலம் முடிவடைந்ததன் பின்னரும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் புதிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடாமலும் வாடகை அறவிடாமலும் பழைய ஒப்பந்தக்காரருக்கே இரண்டு சிற்றுண்டிச்சாலைகளையும் நடாத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(எ) 2013 ஆம் ஆண்டின் போது உயிரியல் மருத்துவ பொறியியல் பீடத்தினால் பெறுமதி சேர் வரியுடன் ரூபா 12,402,493 தொகை செலவிடப்பட்டு 01 Orthopedic OT Table கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டிருந்தது. மிகவும் முக்கியமாக 09 தொழில்நுட்ப மாதிரிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அனைத்தும் மாதிரிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 7 ஆவது குறைந்த விலை சமர்க்கப்பட்டிருந்த வழங்குனரின் கூறுவிலை ரூபா 10,660,714 ஆக இருந்தது. எனினும் மாதிரியை பூர்த்தி செய்திராத கூடிய விலையான ரூபா 11,073,655 ஐ சமர்ப்பித்திருந்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரை மற்றும் கொள்வனவு குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்ட காரணத்தினால் ரூபா 412,941 தொகை கூடுதலாகச் செலுத்த நேர்ந்திருந்தது. மேலும் வழங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் மற்றும் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த வழங்குனர் ஆகிய இரண்டு பேரும் முன் வைக்காத மிக முக்கிய தொழில்நுட்ப மாதிரி சமமாக இருந்தமையால் இவ் உபகரணம் ஆகக் குறைந்த விலைக்கு அதாவது ரூபா 1,960,000 இற்கு கொள்வனவு செய்யப்படக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) அமைச்சிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் நியமன அதிகாரி அமைச்சின் செயலாளராக இருந்த போதிலும் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அதிகாரத்தை மிகைத்து விண்ணப்பங்களைக் கோரி நேர்முகப் பரீட்சையொன்றை நடத்தாமல் முறையற்ற விதத்தில் நடவடிக்கை எடுத்து 2008 ஆகஸ்ட் 6 ஆம் திகதி வரையிலும் சுகாதார சாரதி மேற்பார்வையாளர் பதவி ஒன்றை வகித்து வந்த ஊழியர் ஒருவரை 2009 யூன் 01 ஆம் திகதி முதல் ஆரம்ப போக்குவரத்து வேலையாளர் பதவியில் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த ஊழியர் 2010 பெப்ரவரி 08 ஆம் திகதி முதல் ஆரம்ப போக்குவரத்து வேலையாளர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தார். மேலும் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் ஒரு போக்குவரத்து உத்தியோகத்தர் பதவி மாத்திரம் இருந்ததுடன், அங்கு நிரந்தர உத்தியோகத்தரொருவர் நிரந்தரமாக இருக்கும் போது 2 போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிகள் உள்ளதாக போலியாக குறிப்பிட்டு 2011 செப்தெம்பர் 22 ஆம் திகதி முதல் சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் அவர் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஐ) மீளாய்வாண்டின் போது கொழும்பு சிறுவர் வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் வெளிநாடு செல்வதற்காக பெற்றுக் கொண்டிருந்த 37 நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகளுக்கான சம்பளமான ரூபா 91,057 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வெளிநாடு சென்றிருந்த முழுக்கால பகுதியின் போதும் கொழும்பு சிறுவர் மருத்துவமனையில் வேலை புரிந்ததன் பேரில் On Call

படிகளாக ரூபா 100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது இந்த வைத்தியர் சம்பளமற்ற விடுமுறையை முறைபடி அங்கீகரித்துக் கொள்ளாமல் வெளிநாடு சென்றிருந்ததுடன் அக்காலப்பகுதிக்காக சம்பளமாக ரூபா 76,710 தொகை வைத்தியருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஓ) முறையான ஒழுக்காற்று பரிசோதனையொன்றின் பின்னர் குற்றவாளியாக்கப்பட்டதன் காரணமாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் சேவையிவிருந்து நீக்குவதற்காக குறித்த வைத்தியருக்கு வழங்கப்பட்டிருந்த கடிதம் அவருக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. சேவையிலிருந்து நீக்குதல் அமுலாகும் திகதியான 2013 ஜனவரி 7 ஆம் திகதியின் பின்னர் 8 மாதங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதியில் அவருக்கு ரூபா 813,436 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்து.

### 3.26 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13,972 | 12,202 | 1,770 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 31,023 | 25,504 | 5,519 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 5,101 | 3,765 | 1,336 | - |
| (iv) | ஆரம்பத் நிலை | 28,758 | 22,463 | 6,295 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | | 741 | - | 741 |
| | மொத்தம் | 78,854 | 64,675 | 14,920 | 741 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 14,920 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 741 மிகைகளுக்கு முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாதிரியொன்றாக தெரிவு செய்யப்பட்ட அமைச்சு, அதன் கீழ் உள்ள இரண்டு நிறுவனங்கள் மற்றும் எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஒழிப்பதற்கான உலகலாவிய நிதிய செயற்திட்டத்தில் காணப்பட்ட பல்வேறு 14 பதவிகள் 1 ஆண்டு முதல் 9 ஆண்டுவரையான காலப்பகுதியிலிருந்து வெற்றிடமாக இருந்து வந்ததுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பதில் கடமை புரிவதற்கும் கடமை மேவுகை செய்வதற்காகவும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(iii) 2014 செப்தெம்பர் 4 ஆம் திகதி 2-125/2014 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கையின் 3 ஆம் பந்திக்கு முரணாகவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் அங்கீகாரம் இல்லாமலும் 2014 ஒக்டோபர் 1 ஆம் திகதி ஓய்வு பெற்ற இலங்கை தேசிய வைத்தியசாலையின் தலைமை விஷேட தர தாதி உத்தியோகத்தர் 2015 பெப்ரவரி 25 ஆம் திகதி வரையிலும் அப்பதவியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த காரணத்தினால் அப்பதவிக்காக தகுதியுடைய விசேட தர தாதி உத்தியோகத்தர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தது.

(iv) சிறுவர் வைத்தியசாலையில் நினைவிழக்கச் செய்யும் வைத்தியர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுவதால் (MRI) Marginalia Resonance Imaging Scanner பரிசோதனைகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் இயந்திரப் பாவனையால் பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. அவ்வாறு 38 கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களின் உதவி தேவையென இனங்காணப்பட்டிருந்த போதிலும், 14 கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களின் சேவைகள் மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்தன. நினைவிழக்கச் செய்யும் மருத்துவர்களினதும் கதிரியக்க

தொழில்நுட்பவியலாளர்களினதும் பற்றாக்குறை காரணமாக 2015 யூன் 12 ஆம் திகதி முதல் 2015 திசெம்பர் 18 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் MRI பரிசோதனை காத்திருக்கும் பட்டியலில் காத்திருக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை 303 ஆகும்.